## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.523/2013** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.1.சுசிலா** |
| **Husband's Name** | : **பரந்தாமன்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.12.2019

மு.வி:

நான் செக்கானூரணியில் வசித்து வருகிறேன். நான் கொசவபட்டி பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றுகிறேன். சாட்சி ராஜம்மாள் என்னுடைய அம்மா. 30.01.2011 ஆம் தேதி இரவு சுமார் 10 மணிக்கு நானும் எனது அம்மா ராஜம்மாளும் எங்கள் வீட்டின் வாசல் படிக்கட்டில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது காம்பவுண்ட் சுவருக்கு வெளியே யாரோ நிற்பதுபோல் ஒரு தலை தெரிந்தது. அதை யார் என்று பார்ப்பதற்குள் 3 நபர்கள் திடீரென்று வந்து என்னையும் எனது அம்மாவையும் என்ன அணிந்திருக்கிறார்கள் என பார்த்தார்கள். நான் கழுத்தில் கயர் அணிந்திருந்தேன். எனது அம்மா 1 பவுன் தாலி அணிந்திருந்தார். அதை ஒருவர் அத்துவிட்டு 3 நபர்களும் அங்கியிருந்து ஓடிவிட்டார்கள். மேற்படி நபர்கள் நீதிமன்றத்தில் இருக்கிறார்களா என்றால் அடையாளம் தெரியவில்லை. சம்பவம் நடந்தபோது இரவு நேரம் என்பதால் என்னால் சரியாக பார்க்கமுடியவில்லை. வந்திருந்த 3 பேரும் கையில் கையடக்க பெரிய ஜல்லிக்கற்கலை வைத்திருந்தார்கள். வேறு எதுவும் சொல்லவில்லை. நாங்கள் சத்தம்போட்டவுடன் அருகில் வசிப்பவர்கள் வந்துவிட்டார்கள். மறுநாள் காலை செக்கானூரணி காவல் நிலையம் சென்று சம்பவம் குறித்து புகார்கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு **அ.சா.ஆ.1.** சுமார் 6 மாதங்கள் கழித்து கருப்பாயூரணி காவல் நிலையம் வந்து நகையை வாங்க சொன்னார்கள். பின்னர் அங்கு நகை கிடைத்துவிட்டது என்றும் உசிலம்பட்டி

நீதிமன்றத்தில் நகையை திரும்ப பெற்றுக்கொள்ளுமாறு சொன்னார்கள். பின்னர் நான் நீதிமன்றத்தில் மனு செய்து நகையை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை தான் திருடுபோன நகையாகும். அது **சா.பொ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.523/2013** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.2.ராஜம்மாள்** |
| **Husband's Name** | : **ஒச்சாத்தேவர்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.12.2019

மு.வி:

நான் செக்கானூரணியில் வசித்து வருகிறேன். நான் வேலைக்கு செல்லவில்லை. அ.சா.1 என்னுடைய மகள். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் என்னுடைய மகள் அ.சா.1ன் வீட்டிற்கு சென்று இரவு 10 மணிக்கு நானும் எனது மகளும் வீட்டின் வாசல்படியில் காம்பவுண்ட் சுவரில் உள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். திடீரென்று வந்து நான் கழுத்தில் அணிந்திருந்த 1 பவுன் தாலிக்கொடியை பறித்தார்கள். நான் அவர்கள் கையை பிடித்துக்கொண்டவுடன் என்னை முதுகில் குத்தி அடித்தார்கள். வேறு எதுவும் சொல்லவில்லை. அவர்கள் யார் என்பதை என்னால் அடையாளம் பார்க்க முடியவில்லை. ஆனால் 20 வயது மதிக்க தக்கவராக இருந்தார்கள். நாங்கள் சத்தம்போட்டவுன் அருகில் வசிப்பவர்கள் வருவதை பார்த்தவுடன் ஓடிவிட்டார்கள். பின்னர் 1,2 மாதங்கள் கழித்து கிடைத்ததாக சொன்னார்கள். என் மகள் அதனை நீதிமன்றத்தில் பெற்றுக்கொண்டார். மேற்படி நகைகளை என்னால் அடையாளம் காட்ட முடியும். சா.பொ.1யை சாட்சி இந்த நகை இல்லை என்றும் குண்டுகளுடன் உள்ள நகை என்று சொன்னார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.